**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 02– ஆம் நாள், வியாழக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 56/2024**

**CNR.NO.TNTP190015902024**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக பெட்டவாய்த்தலை காவல் நிலையம், உதவி ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.675/2020 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரிகள் :<br>1. திருமதி. ஜமுனாதேவி (வயது 40 )<br>க/பெ. மகாலிங்கம்<br>2. திரு. அருண்பாலசந்தர் (வயது 20 )<br>த/பெ. மகாலிங்கம் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவு 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு** 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act **–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ்** |

| | |
|---|---|
| | **எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1. திருமதி. ஜமுனாதேவி | திரு. மகாலிங்கம் | இந்து | கூலி | குடித்தெரு, மீனாட்சிபுரம், திருப்பராய்த்துறை, ஸ்ரீரங்கம், திருச்சி | 40 |
| 2 | திரு.அருண் பாலசந்தர் | திரு. மகாலிங்கம் | இந்து | கூலி | குடித்தெரு, மீனாட்சிபுரம், திருப்பராய்த்துறை, ஸ்ரீரங்கம், திருச்சி | 20 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 01.09.2020 |
| புகார் | : | 01.09.2020 |
| கைது தேதி | : | 14.09.2020 |
| பிணை விடுவிப்பு | : | 14.09.2020 (Station Bail) |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 15.06.2024 |
| விசாரணை முடிவு | : | 02.07.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 12.09.2023 |
| Date of Questioning | : | 03.07.2024 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>(1) 26.11.2024 — 26.11.2024<br>(2) 26.11.2024 — 26.11.2024<br>(3) 26.11.2024 — 26.11.2024<br>(4) 26.11.2024 — 26.11.2024<br>(5) 04.02.2025 — 04.02.2025<br>(6) 04.02.2025 — 04.02.2025<br>(7) 29.01.2026 — 29.01.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 29.01.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 05.04.2024 ம் தேதியன்று CC. No. 56/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 02.07.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. பாபு அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள்

மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 01.09.2020ம் தேதி மாலை 17.00 மணிக்கு பொது சந்து பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு வாதி புவனேஷ்வரி என்பவர் பொது சந்தின் அருகே போட்டு இருந்த சிமெண்ட் தளத்தினை, எதிரிகள் ஜமுனாதேவி, அருண்பாலசந்தர் இருவரும் சேர்ந்து இடிக்க வந்த போது அதனை கேட்ட வாதி புவனேஸ்வரி மற்றும் கமலம், மோகனபிரியா, கோகிலா ஆகியோரை பார்த்து எதிரிகள் போடி தேவுடியா புண்டா மவுளுகளே அது உன் இடமாடி என்று திட்டியும், 2 வது எதிரி அருண்பாலசந்தர் என்பவர் மோகனபிரியா மற்றும் கோகிலா ஆகியோரை கையால் கன்னத்தில் அடித்து கீழே தள்ளி காலால் மாறி மாறி எட்டி உதைத்த எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் முன்னிலையான உடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் படி எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act கீழ் அவரிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) அ.சா.1 **திருமதி. புவனேஸ்வரி** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பாராய்துறையில் வசித்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் ஜமுனாதேவி, அருன் பாலசந்தர் ஆகியோரை எனக்கு தெரியும். பக்கத்து வீடுதான் என்றும், கடந்த 01.09.2020ம் தேதி மாலை 5 மணியளவில் தான், தனது அண்ணி கமலா , தனது மகள் கோகிலா, தனது அண்ணன் சேகரின் மகள் மோக பிரியாவுடன் வீட்டில் இருந்தோம் என்றும், அப்போது தங்களது வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமென்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும் என்றும், அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு தாங்கள் அமைத்த சிமென்ட் தளத்தை கடப்பாறையால் இடித்ததாகவும், பிறகு தான் ஏன் இடிக்கிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டேன் அதற்கு எதிரிகள் தனது அண்ணியை மற்றும் தனது மகள், தனது அண்ணன் மகளை எதிரிகள் இருவரும் சேர்ந்து கையால் கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், தனையும் எதிரிகள் இருவரும் சேர்ந்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், எதிரிகள் தன்னை நீ என்ன பெரிய ஆளா என்று திட்டினார்கள் என்றும், அதன்பிறகு தான் காவல் நிலையம் சென்று ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான். என்றும், அந்த புகார் ஆவணம் அ.சா.ஆ.1 என்றும், போலீசார் விசாரணை செய்தனர் நடந்த விவரம் கூறியதாகவும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

(2) **அ.சா.2 திருமதி. கமலா** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பாராய்துறையில் வசித்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன் என்றும்,

அ.சா.1 யை தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் ஜமுனாதேவி, அருன் பாலசந்தர் ஆகியோரை தனக்கு தெரியும் என்றும், பக்கத்து வீடு தான் என்றும், கடந்த 01.09.2020ம் தேதி மாலை 5 மணியளவில் தான் மற்றும் புவனேஸ்வரி கோகிலா, மோக பிரியாவுடன் வீட்டில் இருந்தோம் என்றும், அப்போது தங்களது வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமென்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும் என்றும், அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு தாங்கள் அமைத்த சிமென்ட் தளத்தை கடப்பாறையால் இடித்தார்கள் என்றும், பிறகு தான் ஏன் இடிக்கிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டேன் அதற்கு எதிரிகள் தனது தலை முடியை பிடித்து கீழே தள்ளிவிட்டு கண்ணத்தில் அறைந்தார்கள். என்றம், தனது மகள் மோகனபிரியாவையும் சண்டையை விலக்கிவிட வரும்போது எதிரிகள் தனது மகளின் நைட்டியை பிடித்து கிழித்திவிட்டனர் என்றும், தங்களது வீட்டில் ஆண்கள் இல்லை என்றும், எதிரிகள் தன்னை பார்த்து தேவடியா மகளே என அசிங்கமாக திட்டினார்கள் என்றும், அதன் பிறகு வழக்கு சம்பந்தமாக அ.சா.1 புவனேஸ்வரி புகார் அளித்ததாகவும், போலீசார் வந்து வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ததாகவும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

(3) **அ.சா.3 திருமதி. மோகனாபிரியா** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பாராய்துறையில் வசித்து முதலாம் ஆண்டு படித்து வருகிறேன் என்றும், அ.சா.1 புவனேஸ்வரி, அ.சா.2 கமலம் தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் ஜமுனாதேவி, அருன் பாலசந்தர் ஆகியோரை தனக்கு தெரியும் என்றும், பக்கத்து வீடுதான் என்றும், கடந்த 01.09.2020ம் தேதி மாலை 5 மணியளவில் தனது அம்மா மற்றும் புவனேஸ்வரி கோகிலா, வீட்டில் இருந்தோம் என்றும், அப்போது தங்களது வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமென்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும் என்றும், அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு தாங்கள் அமைத்த சிமென்ட் தளத்தை கடப்பாறையால் இடித்தார்கள் என்றும், பிறகு தான் ஏன் இடிக்கிறீர்கள் என்று எதிரிகளிடம் அ.சா.1 கேட்டார் என்றும்,

அதற்கு எதிரிகள் தனது அத்தையின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டு கன்னத்தில் அறைந்தார்கள் என்றும், சண்டையயை விலக்கிவிட சென்ற போது தன்னையும் , கோகிலாவையும் கீழே தள்ளிவிட்டு தாங்கள் இருவரும் அணிந்திருந்த நைட்டியை பிடித்து இழுத்ததில் நைட்டி கிழிந்து விட்டது என்றும், தங்களது வீட்டில் ஆண்கள் இல்லை என்றும், அதன்பிறகு வழக்கு சம்பந்தமாக அ.சா.1 புவனேஸ்வரி புகார் அளித்தார் என்றும், புகார் அளித்த பின் எதிரிகளின் தகப்பனார் தங்களை மிரட்டினார் என்றும், போலீசார் வந்து வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ததாகவும், அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 **திருமதி. தனலெட்சுமி** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பாராய்துறையில் வசித்து வந்து சுயதொழில் செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தான் +2 வரை படித்துள்ளேன் என்றும், எழுத படிக்க தெரியும் என்றும், புகார்தாரர், எதிரிகள் இருவரையும் தனக்கு தெரியும் என்றும், சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் தான் தனது வீடும் உள்ளது என்றும், கடந்த 02.09.2020ம் வருடம் காலை சுமார் 10.30 மணி இருக்கும் அப்போது போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்ததாகவும், தன்னை கேட்டபோது சம்பவம் நடந்தது உண்மை தான் என்று சொன்னேன் என்றும், தன்னுடன் ராமலிங்கம் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தார் என்றும், அந்த பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.2 என்றும், போலீசர் தன்னை விசாரணை செய்ததாகவும், அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 **திருமதி. கோகிலா** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பராய்துறையில் வசித்து வந்து தனியார் நிறுவனத்தில் வசித்து வருகிறேன் என்றும், அ.சா.1 புவனேஸ்வரி தனது அம்மா தான் என்றும், ஆஜர் எதிரிகள் இரண்டு நபர்களையும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 2020ம் வருடம் ஜனவரி மாதத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் தானும் அம்மாவும் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி அருண்பாலசந்தர் என்பவர் கடப்பாறையை எடுத்து

தங்கள் வீட்டில் போட்டிருந்த டைல்ஸ் தளத்தை சேதப்படுத்திகொண்டு இருந்தார் என்றும், அதன்பிறகு தானும் தனது அம்மாவும் ஆஜர் எதிரிகளை பார்த்து ஏன் தளத்தை சேதப்படுத்திகீறீர்கள் என்று கேட்டதற்க்கு எதிரிகள் இருவரும் சேர்ந்து தங்களை பார்த்து தேவடியா என ஆபாசமாக திட்டினார்கள் என்றும், எதிரி அருண் தனது அத்தை கமலாவை பார்த்து திட்டிவிட்டு கமலாவை எதிரி அருண் காலால் எட்டி உதைத்தார் அதில் கமலா விழுந்துவிட்டார் என்றும், அதன்பிறகு தானும் தனது அம்மாவும் தனது அத்தையை பிடித்து தூக்கினோம் அதன்பிறகு எதிரிகள் இருவரும் சேர்ந்து தனது கண்ணத்தில் அறைந்து தனது நைட்டியையும் , தனது அம்மாவின் நைட்டியையும் கிழித்துவிட்டனர் என்றும், தனது கைவிரலை பிடித்து உடைத்துவிட்டனர் என்றும், அதன்பிறகு செந்தில் என்பவர் வந்து தங்களை மருத்துவமனை அழைத்து சென்றார் என்றும், தான் கைவீக்கத்திற்கு எண்ணெய் கட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தனர் போலீசாரிடம் நடந்த விவரம் கூறினேன் என்றும், அதன்பிறகு எதிரி அருணின் அப்பா தங்களை பார்த்து போலீசாரிடம் புகார் கொடுத்ததை கூறி தங்களை மீண்டும் எப்படி வாழ்வீர்கள் என்று மிரட்டியதாகவும், அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

(6) அ.சா.6 **திரு. செந்தில்குமார்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பராய்துறையில் வசித்து வந்து விவசாய வேலை செய்து அ.சா.1 புவனேஸ்வரி, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களை தனக்கு தெரியும் ஆஜர் எதிரிகள் இரண்டு நபர்களையும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 2020 வருடத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் மேற்படி இரண்டு தரப்பிற்க்கும் சிவில் பிரச்சனை இருந்து வந்தது என்றும், சம்பவதன்று சத்தம் கேட்டது தான் அ.சா.1 ன் வீட்டின் அருகே தானும் தனது மனைவி தனலட்சுமி என்பவரும் சென்றோம் அப்போது தான் பார்த்தபோது கோகிலாவின் நைட்டி கிழிந்து இருந்தது என்றும், கோகிலாவிற்கு விரலில் காயம் ஏற்பட்டது என்றும், பிறகு தான் சண்டையை விளக்கிவிட்டேன் என்றும், பிறகு கோகிலாவை சிகிச்சைகாக எண்ணெய்

கட்டு போட அழைத்து சென்றேன் என்றும், அதன் பிறகும் சண்டை நடந்தது என்றும், பிறகு அந்த கோகிலாவை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் வந்தேன் என்றும், போலீசார் விசாரணை செய்னதர் நடந்த விவரம் கூறியதாகவும், அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார்.

(7) அ.சா.7 **திரு. அருண்குமார்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்இதற்கு முன்பு பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 01.09.2020–ம் தேதி 19.00 மணிக்கு திருப்பராய்த்துறை மீனாட்சிபுரம் குடித்தெருவை சேர்ந்த சித்ராமோகன் மனைவி புவனேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று 01.09.2020–ம் தேதி 19.00 மணிக்கு பெட்டவாய்த்தலை காவல் நிலைய மனு எண்.231/2020 பதிவு செய்து மனுவை விசாரணை செய்து பின்னர் புகாரின் தன்மைகேற்ப கடந்த 02.09.2020ம் தேதி நிலைய குற்ற எண்.675/2020 சட்டப்பிரிவுகள் 294(b), 323 of IPC r/w 4 of Women Harreshment Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், (காவல்துறை கூடுதல் இயக்குனர் மாநில குற்ற ஆவண காப்பகம் அவர்களின் RC.No.D–X/3833/SCRB/2014–8 DATE–03.04.2020 மற்றும் திருச்சி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆவண எண்.C.No.8/CCTNS/TRI/2020 தேதி 04.04.2020 உத்தரவின்படி முதல் தகவல் அறிக்கைக்கு வரிசை எண்.TRI C8 0630 கொடுக்கப்பட்டுள்ளது). அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், அந்த புகார் ஆவணம் ஏற்கனவே அ.சா.ஆ.1 என்றும், பின்னர் கடந்த 02.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் தனலெட்சுமி, ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் ஜமுனாதேவி, அருண்பாலச்சந்தர் ஆகியோர்களை பெருகமணி பஸ்டாப் அருகே 14.09.2020 தேதி 15.45 மணிக்கு காரணம் கூறி கைது செய்து உரிய

சட்டநடைமுறைகளை பின்பற்றி தக்க நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் சாட்சிகள் புவனேஸ்வரி, கமலம், கோகிலா, மோகன பிரியா, செந்தில்குமார், தனலட்சுமி, ராமலிங்கம் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(b), 323 of IPC r/w 4 of Women Harreshment Act–கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 01.09.2020ம் தேதி மாலை 17.00 மணிக்கு பொது சந்து பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு வாதி புவனேஷ்வரி என்பவர் பொது சந்தின் அருகே போட்டு இருந்த சிமெண்ட் தளத்தினை, எதிரிகள் ஜமுனாதேவி, அருண்பாலசந்தர் இருவரும் சேர்ந்து இடிக்க வந்த போது அதனை கேட்ட வாதி புவனேஸ்வரி மற்றும் கமலம், மோகனபிரியா, கோகிலா ஆகியோரை பார்த்து எதிரிகள் போடி தேவுடியா புண்டா மவுளுகளே அது உன் இடமாடி என்று திட்டியும், 2 வது எதிரி அருண்பாலசந்தர் என்பவர் மோகனபிரியா மற்றும் கோகிலா ஆகியோரை கையால் கன்னத்தில் அடித்து கீழே தள்ளி காலால் மாறி மாறி எட்டி உதைத்த எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார்தாரர் சாட்சி தனது முதல் விசாரணையில் " ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் . கடந்த 01.09.2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான், எனது அண்ணி கமலா, எனது மகள் கோகிலா , எனது அண்ணன் சேகரின் மகள் மோகன பிரியாவுடன் வீட்டில் இருக்கும் போது, அப்போது எங்கள் வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமெண்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும். அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு நாங்கள் அமைத்த சிமெண்ட் தளத்தை கடப்பாறையால் இடித்தார்கள். எனது அண்ணியை மற்றும் எனது மகள், எனது அண்ணன் மகளை எதிரிகள் இருவரும் சேர்ந்து கையால் கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டார். " என்றும்,

மேலும் அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் " பொது சந்தில் தான் நாங்கள் சிமெண்ட் தளம்போ'டுடு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். , அ.சா.1 புகார்தாரரின் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில் புகார்தாரர் சாட்சி தனது முதல் விசாரணையில் பொது சந்து என்று எவ்வித சாட்சியமும் அளிக்காமல் இருந்துள்ளார் என்றும், மேலும் அ.சா.1 புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் பொது சந்தில் தான் நாங்கள் சிமெண்ட் தளம்போட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பது புகார்தாரரின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.1 புகார்தாரர் சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சிக்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்திருப்பது இவ்வழக்கை பாதிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் அ.சா.2 கமலா தனது சாட்சியத்தில் " அ.சா. புவனேஸ்வரியையும், ஆஜர் எதிரிகளையும் தெரியும். " கடந்த 01.09.2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான், மற்றும் புவனேஸ்வரி, கோகிலா, மோகன பிரியாவுடன் வீட்டில் இருக்கும் போது, அப்போது எங்கள் வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமெண்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும். அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு

வருடங்களுக்கு பிறகு நாங்கள் அமைத்த சிமெண்ட் தளத்தை கடப்பாறையால் இடித்தார்கள். ஏன் இடிக்கிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டதற்கு அதற்கு எதிரிகள் எனது தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டு கண்ணத்தில அறைந்தார்கள். எனது மகள் மோகபிரியாவையும் சண்டையை விலக்கிவிட வரும்போது எதிரிகிள் எனது மகளின் நைட்டியை பிடித்து கிழித்துவிட்டார்கள். என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.3 தனது முதல் விசாணையில் " " கடந்த 01.09.2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது அம்மா, மற்றும் புவனேஸ்வரி, கோகிலா, வீட்டில் இருக்கும் போது, அப்போது எங்கள் வீட்டின் வாசலுக்கு அருகே சிறியதாக ஒரு சுமார் 2 அடி அளவில் சிமெண்ட் தளம் அமைத்து சுமார் 2 வருடங்கள் இருக்கும். அதை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு நாங்கள் அமைத்த சிமெண்ட் தளத்தை கடப்பாறையால் இடித்தார்கள். ஏன் இடிக்கிறீர்கள் என்று அ.சா.1 கேட்டார். அதற்கு எதிரிகள் எனது அத்தையின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டு கண்ணத்தில் அறைந்ததார். சண்டையை விலக்கிவிட சென்றபோது என்னையும், கோகிலாவையும் கீழே தள்ளிவிட்டு நாங்கள் இருவரும் அணிந்திருந்த நைட்டியை பிடித்து இழுத்ததில் நைட்டி கிழிந்துவிட்டது. என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.7 உதவி ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் " சிமெண்ட் தளம் வழக்கு சந்தானது பொது சந்து என்றால் புகார்தாரர் போட்ட சந்து என்று புகாரில் உள்ளது. அ.சா.5 கமலா, அ.சா.6 செந்தில்குமார் இருவரும் அ.சா.5 க்கு கட்டைவிரலில் அடிப்பட்டதாகவோ அதற்கு எண்ணெய் வைத்தியம் பார்த்ததாகவோ எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சிமெண்ட் தளம் உடைக்கப்படவில்லை. நான் சென்று பார்க்கும் போது அந்த சிமெண்ட் தளம் உடைக்கப்படவில்லை. புகாரில் எதிரிகள் யாரை கையால் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் வாதியை அடித்ததாக மட்டும் தான் குறிப்பிடபட்டுள்ளது. புகாரில் அருகில் யார், யார்

இருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவம் சந்தில் நடைபெற்றதாக உள்ளது. ஆனால் மகஜரில் நடைபாதையில் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சந்தின் அருகே நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். குற்ற இறுதி அறிக்கையில் பொது சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்றும்,

மேலும் அ.சா.1 புகார்தாரரின் சாட்சியம் நம்பும் வகையில் அமையவில்லை என்றும், மேலும் அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலான சாட்சியத்தை பரிசீலனை பார்க்கையில் எதிரிகள் அ.சா.2 கமலம் , அ.சா.5 கோகிலா அவர்களின் நைட்டியை பிடித்து கிழித்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.5 , அ.சா.6 இருவரும் அ.சா.5 க்கு கட்டைவிரலில் அடிப்பட்டதாகவோ அதற்கு எண்ணெய் வைத்தியம் பார்த்ததாகவோ தனது விசாரணையில் சொல்லவில்லை என்றும், மேலும் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிான சாட்சிகளின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரி குற்றவாளி என்று முடிவு செய்ய இயலாது. மேலும் அ.சா.7 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் எவரும் இல்லாததால் தனிநபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா.7 உதவி ஆய்வாளர் அவர்களை சாட்சியத்தை மட்டுமே எதிரிகள் தான் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 294(b), 323 of IPC r/w 4 TNPHW Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும்இல்லை என்பதால் வழக்கு சொத்தை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 02 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.02 16:51:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திருமதி. புவனேஸ்வரி

அ.சா 2 : திருமதி. கமலா

அ.சா 3 : திருமதி. மோகனபிரியா

அ.சா 4 : திருமதி. தனலெட்சுமி

அ.சா 5 : திருமதி. கோகிலா

அ.சா 6 : திரு. செந்தில்குமார்

அ.சா 7 : திரு.அருண்குமார்

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 26.11.2024 புகார் ஆவணம்

அ.சா.ஆ. 2 : 26.11.2024 பார்வை மகஜர் ஆவணம்

அ.சா.ஆ. 3 : 29.01.2026 அச்சு முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 4 : 29.01.2026 மாதிரி வரைபடம்

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:—இல்லை**

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் :—** இல்லை

**எதிரிகள் தரப்பில் சான்றாவணம் :—** இல்லை

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.02 16:52:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஸ்ரீரங்கம்.

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், பெட்டவாய்த்தலை காவல் நிலையம்.